**வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஏப்ரல் 01 முதல் 2023 மார்ச் 31 வரையான மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த 03 ஆண்டு காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அந்த நிறுவனத்தில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் ஏடுகளை பேணுதல் வேண்டும். குறித்த சட்டத்தின் 16(2) ஆம் உபபிரிவின் பிரகாரம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் விதிகளால் வழங்கப்படக்கூடிய கால எல்லைக்குள், வரைவு ஆண்டறிக்கைகளுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர், வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதி செய்வார். மேலும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் வரைவு ஆண்டறிக்கையுடன் சேர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரிசை அமைச்சு மற்றும் பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஏப்ரல் 01 முதல் 2023 மார்ச் 31 வரையிலான 7 ஆண்டுகள் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைகள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பவற்றின் விசேட ஏற்பாடுகள் தொடர்பான பின்வரும் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர் சபை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பானவர்கள் ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**2.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருக்கும் தன்மை**

2011 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் கடைசியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விடயம் | தொகை ரூபா |
|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 91,269,967 |
| நடைமுறை சொத்துக்கள் | 832,852,873 |
| | --------------- |
| மொத்த சொத்துக்கள் | 924,122,840 |
| | ========== |
| நடைமுறை பொறுப்புக்கள் | 45,828,678 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 929,570,102 |
| | -------------- |
| மொத்த பொறுப்புக்கள் | 975,398,780 |
| தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம் | (51,275,940) |
| | --------------- |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 24,122,840 |
| | ========= |
| மொத்த வருமானம் | 5,166,023 |
| மொத்த செலவினம் | 7,894,846 |
| | ------------- |
| பற்றாக்குறை | 2,728,823) |
| | ======== |

**3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி நடவடிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 யூலை 01 ஆம் திகதிய பொதுமுயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பிஈ/ஜீஓசீஓ/ரீஆர்-9 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஒரு வருட காலத்திற்கு நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரி 2022 நவம்பர் 30 வரை தனது கடமைகளைச் செய்திருந்த போதிலும் நியமனம் 2023 யூலை 25 ஆம் திகதிய அமப/23/1151/616/025 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அந்த அதிகாரியின் நியமனம் நீடிக்கப்பட்டது. அதேபோல், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து எழுத்துமூல கடமைப் பணியின்றி அதிகாரி செயற்பட்டிருந்தார். | 2011.07.01 முதல் 2022.11.30 வரை தகுதி வாய்ந்த அதிகாரியின் நியமனத்தை முறைப்படுத்துவது குறித்தும், 2022.12.01 முதல் புதிய தகுதிவாய்ந்த அதிகாரியை நியமனம் செய்வது குறித்தும் 2023.01.31 இல் அமைச்சரவையின் தீர்மானம் பெறப்பட்டிருந்தது. | 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கடமையாற்றிய தகுதி வாய்ந்த அதிகாரியின் நியமனம் தொடர்பான முழு காலப்பகுதியையும் ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 சனவரி 31 ஆம் திகதிய அமப/22/2180/616/034 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் 06 மாத காலப்பகுதிக்குள் கலைக்கப்படுவதற்கு உட்பட்டு 2022 திசெம்பர் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டு அக் காலப்பகுதிக்கு அப்பால் ஒரு வருடத்திற்கும் மேலாக கடந்திருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் கலைப்பு இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தகுதிவாய்ந்த அதிகாரியின் காலத்தை நீடிப்பதற்கும் கலைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கலைப்பாளரை நியமனம் செய்வதற்கு அங்கீகாரம் கோரி 2023.07.26 இல் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு, 2023.09.12 ஆம் திகதிய அமப/23/1428/616/025-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | 2023 செப்தெம்பர் 12 ஆம் திகதிய அமப 23/1428 /616/025-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2023 யூலை 01 முதல் 4 மாத காலப்பகுதிக்கு மாத்திரமே கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் கலைப்பு 2024 மார்ச் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை . கலைப்பு உடனடியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (இ) | இறப்பர் தொடர்பான முடிக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 1999 ஆம் ஆண்டு மற்றும் 2001 ஆம் ஆண்டு இந்த கம்பனிக்கு திறைசேரியால் வழங்கப்பட்ட உபகடன் தொகையில் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான அட்டுறு உபகடன் தொகை ரூபா 766.74 மில்லியன் ஆக இருந்ததுடன் அட்டுறு வட்டி ரூபா 612.80 மில்லியன் ஆக இருந்தது. மேலும் எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையை பொருத்தமான முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கும் அதன் இயந்திரங்களை விற்பனை செய்வதற்கும் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு 2019 ஏப்ரல் 24 ஆம் திகதிய அமப/19/0985/117/031 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்படி உபகடன்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலை தொடர்பான புதிய மதிப்பீட்டு அறிக்கையை அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம் பெற்றுக்கொண்டது. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உரிய இயந்திரங்களில் உள்ள உலோக வகைகள் பிரிக்கப்படாததாலும், நிறை குறிப்பிடப்படாததாலும் எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலை தொடர்பான இயந்திரங்கள் ஏலமிடப்பட்டு விற்பனை செய்யப்படும் முழுப் பணியும் வேலைகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்பத் திறன் கொண்ட இலங்கை கைத்தொழில் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் உப கடனைத் தீர்ப்பனவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட இயந்திரங்களை விற்பனை செய்து திறைசேரிக்கு பணம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நாளதுவரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொறுப்புக்களை தாமதமின்றித் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் ஆவணங்களைப் பேணுதல், பாதுகாப்புச் சேவைகள் மற்றும் உரிய அதிகாரியின் படி உள்ளிட்ட செயற்பாட்டுச் செலவினங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா 100,000 செலவினம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டு, திறைசேரியால் சேகரிக்கப்பட்ட குத்தகை வாடகையில் இருந்து அதனை வழங்குவதற்கு 2017 ஆகஸ்ட் முதல் இணங்கப்பட்டிருந்தது. இந்த படி 2020 யூலை வரை மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன், பின்னர், வஹ்ரக இன்டஸ்ட்ரீஸின் மாதாந்த வாடகை, ரூபா 85,000 தொகையான மண்டபத்தின் குத்தகை வாடகை வருமானத்தில் இருந்து கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இந்த அமைச்சிடம் போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால், தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2022.07.18 இல் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சிடம் எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், 2022.10.26 ஆம் திகதிய கடிதத்தின் மூலமும், 2022.11.10 இல் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரமும் இது தொடர்பாக 2022.11.14 இல் எழுத்துமூலம் பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சால் இணங்கப்பட்டவாறு, கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் செலவினங்களை எதிர்கொள்வதற்கு தேவையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஏப்ரல் 01 முதல் 2023 சனவரி 31 வரை கணக்காய்விற்கு வழங்கப்பட்ட வங்கி கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் நடைமுறைக் கணக்கில் மேலதிகப்பற்று காணப்பட்ட சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 5,030 மேலதிகப்பற்று வட்டி மற்றும் ரூபா 10,000 வங்கிக் கட்டணங்கள் செலவிடப்பட்டிருந்தன. | இணங்குகிறேன். | அரச வங்கி கணக்குகள் மூலம் மேலதிகப்பற்று வசதிகள் தொடர்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக்கூடாது. |

**3.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 04 குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு தொழிற்சாலை சாட்சியமளிக்கும் வழக்கின் மூலம் காணியின் உரிமையாளரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மற்ற தொழிற்சாலை, எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையை பொருத்தமான முதலீட்டாளருக்கு குத்தகைக்கு விடுவதற்கும் அதன் இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பெறுகை முறையைப் பின்பற்றி விற்பனை செய்வதற்கும் 2016 நவம்பர் 09, 2019 ஏப்ரல் 24 மற்றும் 2023 மார்ச் 08 ஆம் திகதிய முறையே அமப/16/1902/726/041, | தொழிற்சாலை அமைந்துள்ள காணியானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமானது என்பதால், காணியையும் அதில் உள்ள தொழிற்சாலையையும் 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஒப்புதலை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை காணப்பட்ட போதிலும் அதற்கான ஒப்புதல் தெரிவிக்கப்படாததால் அந்த | அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் இயந்திரங்களை மதிப்பீடு செய்து பெறுகை முறைகள் மூலம் விற்பனை செய்வதற்கும், தொழிற்சாலையை குத்தகைக்கு விடுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமப/19/0985/117/031 மற்றும் அமப/23/0225/616/006 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்கள் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த பணிகள் நாளதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நேரத்தில் குத்தகையை நிறைவேற்ற முடியவில்லை. அதேபோல், இயந்திரங்களுக்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாததால் சம்பந்தப்பட்ட இயந்திரங்களை ஏலமிட முடியவில்லை. | |
| (ஆ) | அரோமா நச்சுரல் இறப்பர் (பிறைவேட்), மாவனெல்ல கேந்திர அப்சரி, மாவனெல்ல ரயர் ரியூப் மற்றும் பதுரலிய கிறீப் இறப்பர் ஆகியவற்றிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள மூன்று தொழிற்சாலைகளில், மாவனெல்ல ரயர் ரியூப் மற்றும் பதுரலிய கிறீப் இறப்பர் ஆகிய இரண்டு தொழிற்சாலைகள் மாத்திரமே தற்போது குத்தகை வாடகையை செலுத்தி வருகின்றன. குத்தகை உடன்படிக்கை இல. 05 இன் விதிமுறைகளின் பிரகாரம் 2021 மார்ச் 14 முதல் அதிகரிக்கப்பட வேண்டிய குத்தகை வாடகை அறவிடப்பட்டிருந்த போதிலும் 2017 மார்ச் 13 முதல் 2021 மார்ச் 13 வரையிலான காலப்பகுதிக்கான அதிகரிக்கப்பட்ட குத்தகை வாடகையான ரூபா 3,908,016 அறவிடப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை அறவிடப்பட்டுள்ள குத்தகை வாடகை தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதுமான தகவல்கள் காணப்படவில்லை. | குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் முறையாக வழங்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 நவம்பர் 09 ஆம் திகதிய அமப/16/1902/726/041 ஐ கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொதுமுயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தால் குத்தகைக்கு விடப்பட்ட மேற்படி 3.2(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள 03 தொழிற்சாலைகளின் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதிலும் குத்தகை வாடகை வருமான அறவீட்டு நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்ளாததால் அது பற்றிய தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை என கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | போதுமான தகவல்கள் காணப்படவில்லை. | குத்தகை வாடகை வருமான அறவீடு தொடர்பான நாளதுவரையான தகவல்களைப் பேணுவதற்கும், கூட்டுத்தாபனம் மற்றும் அமைச்சால் அவற்றைக் கண்காணிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 04 தொழிற்சாலைகளின் குத்தகை வாடகை பெறுவனவுகள் மற்றும் வாடகை வருமான நிலுவைகள் பற்றிய தகவல்கள் பொதுமுயற்சிகள் திணைக்களத்திடமிருந்து 2022 பெப்ரவரி 02 ஆம் திகதிய ரீபிடி/ஏ/பிஈடி/02/2022/17 ஆம் இலக்க கடிதம் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும் அத்தகவல்கள் 2023 திசெம்பர் 31 வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. | போதுமான தகவல்கள் காணப்படவில்லை. | குத்தகை வாடகை அறவீடுகள் மற்றும் குத்தகை வாடகை நிலுவைகள் பற்றிய நாளதுவரையான தகவல்களைப் பேணுவதற்கும், கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் கம்பனி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (உ) | மாவனெல்ல கேந்திர அப்சாரி தொழிற்சாலையின் இடிந்து விழுந்த பிரதான கட்டிடத்தின் மேற்கூரையை திருத்தம் செய்யத் தவறியதன் காரணமாக, குத்தகைக்கு பெற்றவர் 2018 யூலை முதல் வாடகையை செலுத்தியிருக்கவில்லை, 2018 யூன் வரை செலுத்தப்பட்ட குத்தகை வாடகையில், அதிகரிக்கப்பட்ட குத்தகை வாடகையும் அந்த ஆண்டில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறவேண்டிய மொத்த குத்தகை வாடகை நிலுவை ரூபா 44,869,590 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதிலும் புனரமைப்பு பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | தொழிற்சாலையின் புனரமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் பெறவேண்டிய குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டு முதல் தற்போதுள்ள குத்தகை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் குத்தகை உடன்படிக்கைகளின் 5 ஆம் உட்பிரிவின் குத்தகையாளரின் xi ஆம் நிபந்தனைகளின் பிரகாரம் குத்தகையாளரால் கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிரந்தர நிர்மாணங்கள் உட்பட அனைத்து அபாயங்களும் காப்புறுதி செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | குத்தகை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கி அதன் உட்பிரிவுகளின் பிரகாரம் உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வரையறுக்கப்பட்ட இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தால் 2011 பெப்ரவரி 01 முதல் 2026 சனவரி 31 வரையான 15 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுக்கு வஹ்ரக கிறீப் இறப்பர் தொழிற்சாலை வழங்கப்பட்ட போதிலும் கம்பனி 2021 ஆம் ஆண்டில் தொழிற்சாலையை கைவிட்டிருந்தது. தனியார் கம்பனியிடம் இருந்து அறிடப்பட வேண்டிய குத்தகை வாடகையின் விபரங்கள் மற்றும் | இணங்குகிறேன். | குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் பெற வேண்டிய வாடகை மற்றும் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குத்தகை உடன்படிக்கைகளின் அசல் பிரதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 9 ஆம் உட்பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் போன்றன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த தொழிற்சாலை 2021 ஆகஸ்ட் 01 முதல் 2026 சனவரி 31 வரை ரூபா 85,000 மாதாந்த வாடகைக்கு வேறொரு தனியார் கம்பனிக்கு மீண்டும் குத்தகைக்கு விடப்பட்ட போதிலும் அந்த கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் அசல் பிரதி கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கம்பனிக்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடும்போது குத்தகையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளிருப்பு சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததால், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் மற்றும் அச் சொத்துக்களின் இருக்கும் தன்மையை கணக்காய்வால் கண்டறிய முடியவில்லை. | உண்மைகளை கண்டறிய முடியவில்லை. | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் விபரமான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | தொடம்கொட மோல்டட் தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் உரிமையாளரால் சாட்சிய வழக்கு ஒன்றின் மூலம் அத் தொழிற்சாலை கையகபடுத்தப்பட்டுள்ளதென அமைச்சின் ஆவணங்களை பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பான தீர்ப்பின் நகல் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் இதை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்தத் தொழிற்சாலை வைத்திருக்கும் சொத்துக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான எந்தவொரு விபரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எந்த தகவலும் கிடைக்கவில்லை. | இக் கையகப்படுத்தல் தொடர்பான தீர்ப்புகளின் நகல்கள் மற்றும் ஆவண சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 2023 ஜனவரி 31 ஆம் திகதிய அமப/22/2180/616/034 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 06 மாத காலப்பகுதியினுள் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் எல்பிட்டியவில் அமைந்துள்ள இந்த நுரை இறப்பர் தொழிற்சாலையை குத்தகைக்கு விடாததாலும் கணக்காய்விற்கு கணக்குகளை சமர்ப்பிக்காததாலும் வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் | எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை விற்பனை செய்வதற்கு 2023.03.08 ஆம் திகதிய அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அமப/23/0225/616/006 ஆம் இலக்க தீர்மானத்திற்கு பதிலாக, கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கலைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தின் கலைப்பு தொடர்ந்து தாமதமாகியது. | இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு உரிய உலோகங்களைத் தனித்தனியாக வகைப்படுத்தி விற்பனை செய்வது மற்றும் அந்த உலோகங்களை விற்பனை செய்த பின்னர் வரையறுக்கப்பட்ட இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட பணத்தை திறைசேரிக்கு மாற்றுவது வரையான முழு செயன்முறையையும் கையளிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2011/2012 ஆம் ஆண்டு முதல் 2022/2023 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தாபனத்தின் இறுதிக் கணக்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும், அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு கலைப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஓ) | இந்தக் கூட்டுத்தாபனம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ”வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்” என்ற பெயரில் 1995 மார்ச் 06 இல் கூட்டிணைக்கப்பட்டதுடன் 2009 ஒக்தோபர் 27 இல் 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்ட போதிலும் கூட்டுத்தாபனத்திடம் அதற்கான சான்றிதழ் காணப்படவில்லை. அதேபோல், கம்பனிகள் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம், 2009 முதல் கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இருந்த இக் கூட்டுத்தாபனம் 2015 செப்தெம்பர் 21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் வந்துள்ளதுடன் மேற்குறிப்பிட்ட மூன்று தொழிற்சாலைகளும் தற்போது செயலிழந்துள்ள அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. தற்போது, தொழிற்சாலைகளுக்கான குத்தகை வாடகை பொது முயற்சிகள் திணைக்களத்தினால் சேகரிக்கப்படுகிறதுடன் அதன் செயற்பாடுகள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படாத போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் திறமையான அதிகாரியால் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனமானது ஒழுங்காகவும் போதியளவும் மேற்பார்வையிடப்பட்டிருக்காததால் தற்போது கூட்டுத்தாபனத்திற்காக பயன்படுத்தப்பட்ட வளங்கள் பயனற்றதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கலைப்பு இடம்பெற்று வருகிறது. | 2023 சனவரி 31 ஆம் திகதிய அமப/22/2180/616/034 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கலைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |